உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-௩.] குரோதி ௵ மார்கழி௴ [பகுதி-௨.


## கம்பர்.

(௧௨-ம் பக்கத் தொடர்ச்சி.)

### இவர் இராமாயணம்பாடி அரங்கேற்றியது.

அரும்பெறன்மணியும் பெரும்பெயரமிழ்துமே நிறையப்பெற்ற பாற்கடல்போலப் பரந்துவிளங்குகின்ற இராமாயணமென்னுந் தெய்வவான்பனுவலை இவர் பாடியருளியதற்குக் காரணம், இவரது சிராமபத்தியேயன்றி வேறில்லை யென்பது, இவர், "ஆசைபற்றி யறையலுற் றேன்மற்றிவ், வேசில் கொற்றத் திராமன் கதையரோ" எனவும், "ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவ மாந்தி, மூங்கையான் பேச லுற்றா னென்னயான் மொழிய லுற்றேன்" எனவும் இராமாவதாரத்துரைத்துப் புகுந்தவாற்றால் நன்கறியத்தக்கது. இவர் "பத்தர் சொன்னவும் பன்னப்பெறுபவோ" என்றதூஉம் இக்கருத்தையே வலியுறுத்தும். இவர் வளர்ந்துசிறத்தற்குக் காரணமான சடையவள்ளல்குடிக்கும் இச்சிராமபத்தி உண்டென்பது, அவ்வள்ளற்குச் சராமன் எனப்பெயரிட்டு வழங்கியவாற்றால் ஊகிக்கப்படும். அக்குடிப்பரிசயம் இவரது பத்திக்கு ஓர்காரணமாயினும் ஆம். அன்றியும் வான்மீகி முனிவர் திருவாய்மலர்ந்தருளிய சிராமாயணத்தின் திட்பநுட்பஒட்பங்களே இவர்காலத்து யாண்டும் பரந்து விளங்கிமேம்பட்டன என்பதும், அக்காலத்தறிஞரெல்லாம் சிராமகதையை அமிழ்தினும் அதிகமாக மதித்துவந்தனரென்பதும்,

"வைய மென்னை யிகழவு மாசெனக்
செய்த வும்மி தியம்புவ தியாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகழ்
தெய்வ மாக்கதை மாட்சி தெரிக்கவே." (பாயிரம்.)

"நொய்தி னெய்யசொன் னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமர மேழ்துளை
யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே." (ஷ)

"வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
றீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்."

(நாட்டுப்படலம்.)

*"எறிகட லுலகந் தன்னு ளின்றமிழ்ப் புலவர்க் கெல்லா
முறுவலுக் குரியதாக மொழிந்தனன் மொழிந்த வென்சொற்
சிறுமையுஞ் சிலையி ராமன் கதைவழிச் செறித றன்னா
லறிவுடை மாந்தர்க் கெல்லா மமிழ்தமொத் திருக்கு மன்றே."

(பாயிரம்.)

என இவர் இராமாவதாரத்து வழங்கியவாற்றால் உய்த்துணரப்படும். இவ்வாறு அறிஞரெல்லாம் ஒருங்குபாராட்டும் சீராமகதையின் தெய்வமாட்சி, இப்பெரும்புலவரது அறிவுடைநெஞ்சினையும் நன்கு கவர்ந்ததாதலின், அதனையே தமது 'செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய' தமிழ்ப்பாக்களாற் பாடிப் புகழ்நிறுத்துதற்கு ஆசைப்பட்டனர் எனினும் அமையும். இவர் இராமாயணத்தைப் பெரும்பான்மை வெண்ணெய்நல்லூரிலும், சிறுபான்மை ஒற்றியூரிலும் இருந்துபாடினரெனவும், ஒற்றியூரில் இவரிருந்தபோது இந்நூலை இரவிலே பாடினரெனவும், அக்காலத்து மாணாக்கர்பலர் பிந்தாமலெழுதுவதற்கு அவ்வூர்க்காளியைத் தீப்பந்தம் பிடிக்கப்பாடினரெனவும்,

'தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே.'

(இராமாவதாரப்பாயிரம்.)

**கம்பர் காளியைப் பந்தம்பிடியென்று பாடியது.**

ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர்க் காகுத்தன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதுதற்கு நல்லிரவின் மாணாக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி. (தமிழ்நாவலர் சரிதை.)

* இச்செய்யுள் பழைய ஏடுகளிலுள்ளது,

எனவருவனவற்றுல் அறியப்படுகின்றன. இவர் தாம்பாடிய சீராம கதைக்கு இட்ட பெயர் இராமாவதாரம் என்பது,

"நடையி னின்றுயர் நாயகன் ரேற்றத்தி
னிடைநி கழ்ந்த விராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை."

(இராமாவதாரப்பாயிரம்.)

*"இத்த லத்து மிராமாவ தாரமே
பத்தி செய்து பரிவுடன் கேட்பவர்
புத்தி மிக்கரும் புண்ணிய முந்தரு
மெத்த லத்து மவனடி யெய்துவார்." (ஷை)

எனவருவனவற்றுலும், புறத்திரட்டுடையார் இந்நூலை, இராமாவதாரம் என்னும் பெயரே கொண்டாளுதலாலும் தெரிகின்றது. இவர் பாடியது பாலகாண்டமுதல் யுத்தகாண்டமீருகவுள்ள ஆறுகாண்டங்களே என்பதும், பின் உத்தரகாண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினுரென்பதும், அவ்வுத்தரகாண்டம் சோழனதவைக்களத்தே அரங்கேற்றப்பட்டதென்பதும்,

"பூணிலாவுங் கம்பனலம் பொலியுந்தமிழாற் புகழெய்திக்
காணுமாறு காண்டமுறுங் கதையிற்பெரிய கதையென்னுந்
தாணிலாவுங் கழலபயன் சபையிற்பயிலுத் தரகாண்டம்
வாணிதாச னரங்கேற்ற வைத்தார்சோழ மண்டலமே."

(சோழமண்டலசதகம்)

என்னும் படலாற் றெரிகின்றன. ஈண்டு அபயன் என்பது சோழன் என்னும் பொருளில் வந்தது. ஒட்டக்கூத்தர் சரசுவதி தம்பலங் கொடுக்க அதனுற் கவித்திறம் எய்தினவராதலால் அவரை 'வாணிதாசன்' எனப் பெயர் சிறப்பித்து வழங்குவரெனத் தெரியலாகும். இங்ஙனம் கம்பர் பாடியன ஆறுகாண்டங்களேயாம் என்பதற்குப் பெரிதும் இயையவே, அரசகேசரியார் தாமியற்றிய இரகுவம்மிசம் என்னுஞ் செந்தமிழ்நூலிற் சீராமமூர்த்தியின் திருவவதாரமே யுரைத்து "மற்றிவ்விராமகதையின் பூருவபாகம் முழுதையுங் கடலிற்பெ

* பழைய ஏடுகளிலுள்ளது.

ரிய தமிழ்க்கல்வியினையுடைய கம்பநாடர் நிகழ்ந்தவாறு உரைத்தாராதலால் அதனை யீண்டுஓதினேனில்லை; அவருரையாத அக்கதையின் உத்தரபாகமே யானினியோதப்புக்கேன் ” என்னுங்கருத்தினை வெளிப்படுப்பாராய்,

பொற்றூ மரைமா ணெழியாது பொலியு மார்ப
வெற்றுங்கு மேனி ரகுராம சரிதை யாவுங்
கற்றார் கலியிற் பெரிதாந் தமிழ்க் கம்பநாட
னுற்றுங் குரைத்தா னுரையாதஎ வோது கிற்பாம்.

என ஓர் பாடலைக்கூறி அதன்பின்னே சீதை வனம்புகுதல், இலவணன்வதை, சம்புகன்வதை, இராமரவதாரநீங்குதல் முதலாகிய உத்தரகாண்டக் கதைகளையே பல படலங்களாற் பாடியதனையும் ஈண்டைக்கு ஆராய்ந்து கொள்க. இவ்விரகுவம்மிசச் செய்புளாற் கம்பர் உத்தரகாண்டம் பாடினாரில்லையென்பது நன்குதெளியப்படும். இனிச்சில இராமாயண ஏடுகளில்,

கரைபொரு காண்டமேழு * கதைகளா யிரத்தெண்ணூறு
பரவிய பாடைபத்து படலநூற் றைம்பத்தாறு
ஞரைதரு விருத்தம்பன்னீ ராயிரத் தொருபத்தாறு
வரமிகு கம்பன்சொன்ன வண்ணமு மெண்பத்தேழே.

என ஓர் செய்புள் உள்ளது, மேற்காட்டிய பிரபலமான பிரமாணங்களோடு பகைத்தலால் பண்டைவழக்கறியாதார் ஒருவர் பிற்காலத்து இயற்றியதாகுமெனக் கொள்ளத்தகும். ‘கரைபொருகாண்டமாறு’ என்னும் முதலோடு, அதற்குப் பொருந்திய படலமுதலியவற்றின் வரையறையையுமுடைய பழையபாட்டொன்றைப் பிற்காலத்தார் ஏழுகாண்டங்கட்கும் ஒருவாறிையைத்திரித்து இவ்வாறுவழங்கினரென ஊகித்தலுமாம். இச்செய்புளிற் கணக்கிட்ட ஏழுகாண்டச் செய்புட்டொகையினின்று உத்தரகாண்டச் செய்புட்டொகையாகிய ௧௫௦௦-ம் கழித்து நோக்கின் மற்றை ஆறுகாண்டங்கட்கும் உரிய செய்புட்டொகை ௧௦௫௧௬ ஆகும். இக்காலத்து முதல் ஆறுகாண்டங்கட்கும் உள்ள செய்புட்டொகை அச்சுப்பிரதிகளில் ௧௦௫௮௭-ம்

* ‘கதைகளாயிரத் தைஞ்ஞூறு, பரவமர் பத்துநாலு படலநூற்றிருபத்தெட்டு’ எனவும் பிரதிபேதமுண்டு.

ஏட்டுப்பிரதிகளில் ௧௦௭௨௫-ம், ௧௦௬௭௫-ம் ஆகப் பல வேறுவகைப் படுவிது. ஆறுகாண்டங்கட்கும் உள்ள படலத்தொகையும் இங்ஙனமே ௧௧௩, ௧௧௬, ௧௨௮, ௧௩௭ எனப்பலவாருகக் காணப்படுகின்றது. உத்தரகாண்டச் செய்யுட்டொகை ௧௫௦௦ என்பதிற் பெரும்பான்மை வேறுபாடு காணுவிடினும் அதன் படலத்தொகை ௧௮, ௨௩, என வேறு வேறு காணப்படுகின்றது. இவ்வளவு மாறுபாடுற்ற இக்காலத்துப் பிரதிகளைக்கொண்டு இச்செய்யுளிற்கண்ட வரையறைகட்குப் பொருந்த வுரைப்பது அரிதாமென்க. அன்றியும் புறத்திரட்டுடையார் இராமாவதாரமெனப் பெயரிட்டாண்ட,

எய்தவின்னல் வந்த போழ்தி யர்வரேனும் யாவையுஞ்
செய்ய வல்ல ரென்ப தோர்க சென்னெறிக்க ணேகிட
மைய கண்ணி செய்ய பாதம் வல்ல வாய மற்றிவன்
கைக ளின்று பன்ன சாலை கட்ட வல்ல வாயவே.
(இடுக்கணழியாமை-௧௫)

என்னுஞ் செய்யுளுக்கு வேருக இக்காலத்து,

மேவு கான மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன
தாவி லெம்பிகை சாலை சமைத்தன
யாவை யாது மிலார்க்கியை யாதவே.
(அயோத்தியாகாண்டம். சித்திரகூடப்படலம்)

என ஓர் செய்யுள் காணப்படுதலாற் கம்பர் பாடிய பாடல்கள் சில பிற்காலத்து விடப்பட்டும் பிறர்பாடியன சில இடையிடையே மடுக்கப்பட்டும் இப்போதைப் பிரதிகளுள்ளனவென்று தெளியப்படும். * பரிபாடலிலும் சிந்தாமணியிலும் பிற்காலத்துக் கந்தியார் என்பாரொருவர் தஞ்சொற்களையுஞ் செய்யுள்களையும் இடைமடுத்தாற்போல இவ்விராமாவதாரத்திலும் பிற்காலத்து வெள்ளியம்பலத்தம்பிரான் என்பாரொருவர் தஞ்செய்யுட்கள் சிலவற்றை இடைமடுத்துப் போயினரென்பர். இவற்றை வெள்ளிபாடல் என்னும் பெயரான் வழங்குவர். இப்பிறழ்ச்சியேயன்றி எழுதினர் பிழைப்பாலும் பாடகர் பிழைப்பாலும் இவ்வேடுகளெய்திய மாறுபாட்டிற்கும் அளவே

* செந்தமிழ் தொகுதி ௧. பகுதி ௩. பக்கம் ௧௩௮.

யில்லை. ஆதலால் இங்கிலையிற் கம்பர் ஆறுகாண்டங்கட்கும் வகுத்த படலங்கள் இத்துணையெனவும், பாடிய பாடல்கள் இத்துணையெனவும், அப்படலங்களும் பாடல்களும் இவைஇவை எனவும் வரையறுத்துணர்த்தல் இயலாதென்றுணர்க. மேற்குறித்த மாறுபாடுகளொன்றும் எய்தாதனவும், புறத்திரட்டில் இராமாவதாரம் என்று பெயரிட்டு எடுத்தாளப்பட்ட செய்யுட்களெல்லாம் தம்பாலுள்ளனவும் ஆகிய மிகப்பழைய ஏடுகள் சில கிடைத்தனவாயின் இவ்வரையறைகளின் உண்மை நன்கு புலனாகும் என்று கொள்க.

இனிக் கம்பர் தாம்பாடியருளிய இராமாவதாரத்துள் சடையவள்ளலது பெருநன்றிபாராட்டி அவ்வள்ளலை ஆங்காங்கு ஒருபதுகவிகளாற் புகழ்ந்துள்ளனரென்பது,

எண்ணத்தகும்பா ருள்ளளவு மிரவிமதிய மெழுமளவுங்
கண்ணற்கினிய சயராம கதையிலொருபான் கவிமுழுதும்
வெண்ணைச்சடையன் சடையனென விறலார்கம்பன் விளங்கவைத்த
வண்ணத்துரைவே ளாண்பெருமான் வளஞ்சேர்சோழ மண்டலமே.

(சோழமண்டலசதகம்.)

என்னுஞ்செய்யுளாற் றெரிகின்றது. அப்பத்துப்பாடல்களாவன;—

நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தி
னிடைநி கழ்ந்த விராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய் நல்லூர்வயிற் றந்ததே. (பாயிரம்.)

விண்ணவர் போயபின்றை விரிந்தபூ மழையினாலே
தண்ணெனுங் கானநீங்கித் தாங்கருந் தவத்தின்மிக்கோன்
மண்ணவர் வறுமைநோய்க்கு மருந்தன சடையன்வெண்ணை
யண்ணறன் சொல்லேயன்ன படைக்கல மருளினானே.

(பாலகாண்டம், வேள்விப்படலம்.)

அரம டந்தையர் கற்பக நவநிதி யமிழ்தஞ்
சுரபி வாம்பரி மதமலை முதலிய தொடக்கற்
றொருபெ ரும்பொரு ளின்றியே யுவரிபுக் கொளிப்ப
வெருவி யோடின வெண்ணைவாழ் கண்ணன் மேவாரின்.

(ஷை அகலிகைப்படலம்-கஅ)

வண்ண மாலைக் கைபரப்பி யுலகை வளைந்த விருளெல்லா
முண்ண வெண்ணித் தண்மதியத் துதயத்தெழுந்த நிலாக் கற்றை
விண்ணு மண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக்கொண்ட விரிநன்னீர்ப்
பண்ணை வெண்ணைச் சடையன்றன் புகழ்போ லெங்கும் பரந்துள தால்.

(ஷை மிதிலைகாண்படலம். எச.)

மஞ்செனத் திகழ்தரு மலையை மாருதி
யெஞ்சலிற் கடிதெடுத் தெறிய வேநளன்
விஞ்சையிற் றங்கினன் சடையன் வெண்ணையிற்
றஞ்சமென் றார்களைத் தாங்குந் தன்மைபோல்.

(யுத்தகாண்டம், சேதுபந்தனப்படலம்.)

வாசங்கலந்த மரைநாளநூலின் வகையென்பதென்னை மழையென்
றூசங்கைகொண்ட கொடைமீளியண்ணல் சரராமன்வெண்ணை யணுகுந்
தேசங்கலந்த மறைவாணர்செஞ்சொ லறிவாளரென்றிம் முதலோர்
பாசங்கலந்த பசிபோலகன்ற பதகன்றுரந்த வுரகம்.

(ஷை நாகபாசப்படலம். உகஙு)

வன்னிநாட் டியபொன் மௌலி வானவன் மலரின் மேலான்
கன்னிநாட் டிருவைச் சேர்ந்த கண்ணனுமாளுங் காணிச்
சென்னிநாட் டெரியல் வீரன் றியாகமா விநோதன் றெய்வப்
பொன்னிநாட் டுவமைவைப்பைப் புலன்கொள நோக்கிப்போனான்.

(ஷை மருந்துமலைப்படலம். ௫அ)

* அந்தணர் வணிகர் வேளாண் மரபின ராலி நாட்டுச்
சந்தணி புயத்து வள்ளற் சடையனே யனைய சான்றோ
ருய்ந்தன மடிய மென்னு முவகைய ருவரி நாண
வந்தன விராமன் கோயின் மங்கலத் துரிமை மாக்கள்.

'சங்கரனனையசான்றோர்' எனவும் பிரதிபேதமுண்டு

(ஷை திருவபிடேகப்படலம். ௬௫.)

அரியணை யநுமன் றாங்க வங்கத னுடைவாள் வாங்கப்
பரதன்வெண் கவிகை யேந்த விருவருங் கவரி பற்ற
விரைசெறி குழலி யோங்க வெண்ணைமன் சடையன் வண்மை
மரபுளோர் கொடுப்ப வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

(ஷை ஷை. ௯அ,)

---

* இச்செய்யுள் எட்டுப்பிரதிகளிலுள்ளது.

'விரதமா தவர்களேத்த வெண்ணெயூர்ச் சடையன் மைந்தை' எனவும், 'விரிகடலுலகங்காக்கும் வெண்ணெமன்சடையன் வண்மை' எனவும், 'உரிமையினயோத்தியுள்ளா ருரைசெய்வெண்காடன் வந்த மரபினோர்' எனவும் பிரதிபேதங்களுள்ளன.

* மறையவர் வாழி வேத மனுநெறி வாழி நன்னூன்
முறைசெயு மரசர் திங்கண் மும்மழை வாழி மெய்ம்மை
யிறையவ னிராமன் வாழி யிக்கதை கேட்போர் வாழி
யறைபுகழ்ச் சடையன் வாழி யரும்புக ழநுமன் வாழி.

(ஷ விடைகொடுத்தபடலம் வாழ்த்து.)

இவற்றுள் 'வெண்ணெவாழ் கண்ணன்' எனவும் 'கன்னிநாட்டிருவைசேர்ந்த கண்ணன்' எனவும்வருவனவற்றாற்சடையற்குக் கண்ணன் என்பதும் †புலவர் கொடுத்த குணப்பெயராமெனத் தெரிகின்றது. பலர்க்குக் கண்போன்றவன் ஆதலால் அவ்வாறு வழங்கினராவர். இக்கருத்தொக்கியையவே ‡'தண்ணார் கமலச்சதுமுகத்தோனை' என்னும் பாட்டில் "பாரிலுள்ளோர் கண்ணுகவாழும் வெண்ணைத் திரிகர்த்தன்" என வந்ததுங் காண்க. இராமகதையில் ஒரு பான்கவியாற் புகழப்பட்டவன் சடையனே என்பது "சயராமகதையிலொரு பான்கவிமுழுதும், வெண்ணைச்சடையன் சடையனென விறலார் கம்பன் விளங்கவைத்த, வண்ணத்துரைவேளாண் பெருமான்" என்று கூறுதலானும் அறியப்படும். இதற்குப் பொருந்தவே பாண்டிமண்டல சதகமுடையாரும்

தேனேறு மின்சொலி ராமாயணத்துத் திருவழுந்து
ரானே றனைய தமிழ்க்கம்ப நாட னமைத்துவைத்த
தானேரில் கீர்த்திசெய் வெண்ணெய்நல் லூரிற் சடையனைப்போல்
வானேறு சீர்த்திகொள் வேளாளர் பாண்டியன் மண்டலமே.

எனக்கூறினர். இனி 'அந்தணர் வணிகர்' என்னுஞ் செய்யுளிற் 'சங்கரனனையசான்றோர்' எனவும் 'அரியணையநுமன்' என்னுஞ்செய்யுளில் 'உரிமையி னயோத்தி யுள்ளாருரைசெய்வெண் காடன்வந்த

---

* இச்செய்யுள் எட்டுப்பிரதிகளிலுள்ளது.

† "குணப்பெய ரேனைப் புலவோர் கொடுப்பத், தணப்பில வாகித் தழுவும் பெயரே." என்றார் பன்னிருபாட்டியலாரும். (கசஎ.)

‡ 'செந்தமிழ்' தொகுதி ந. பக்கம் ரு.

மரபினோர்' எனவும் வந்த பாடங்களையே கொண்டுநோக்கிற் கம்பர் சடையனையல்லாமல் அவன் குலத்தவரையும் பாடினாரென எண்ண லாகும். சங்கரன் என்பான் சடையன் தந்தை என்பது முன்னரே கூறப்பட்டது. வெண்காடன் என்பவன் சடையனுக்கு இன்ன வுற வினன் என்பது தெளியப்படவில்லையாயினும் நெருங்கிய சுற்றத்த வன் என்பதுமட்டி லூகித்தலாகும். இச்சடைய வள்ளலது குலத் துப் பெண்வழியினரென்று சொல்லப்படுகின்ற மெய்கண்டதேவர்க் குச் சுவேதவனப்பெருமாள் என ஓர் பெயருளதாதல்பற்றி, ஈண்டை வெண்காடன் என்பது அவர் பெயராகவைத்து அவர்க்குப் பிற்கால த்து ஒருவர் இப்பாடத்தை இடைமடுத்தனரோ என ஐயுறுதற்கு மிடனுண்டாதலால் இப்பாடபேதங்களி னுண்மை இப்போது அறி தலரிதாகின்றது. ஒருசாரார் கண்ணன், சரராமன் என்னுமிருவ ரும் சடையனுக்குத் தம்பியர் எனவும் அவரையுங் கம்பர் இராமாவ தாரத்துட் புகழ்ந்துளார் எனவும் கூறுவர். இவ்வாறு பகுத்தறித ற்கு ஏற்ற மேற்கோளொன்றும் யான் காண்கிலேன். அன்றியும் கம்பர், பாண்டியன்முன்னே இணையாரமார்பன்என்பானொருவனை இன்னவன் என்றுரைத்தவிடத்துச் சரராமனுக்கிளையான் எனவே கூறியுள்ளார். சரராமன் சடையனின் வேறாய் அவனுக்கு இளைய னேயாயின் இயல்பாகவே மூத்தோனும் எல்லாரினுஞ் சிறந்து புகழ் பெற்றோனும் பல்லோரானும் நன்கறியப்பட்டோனும் ஆகிய சடை யனுக்கிளையான் எனக்கூறுவரல்லது அவ்வாறு கூறார்; பின்னர்ச் சரராமனை இன்னவன் எனத் தெரிவித்தற்குச் சடையன்றம்பி என வே கூறவேண்டும். இவையல்லாமற் கம்பர் தெய்வவரத்தினாற் கவி சொல்லிய நாளில் முதன்முதற் பாடிய 'மோட்டெருமைவாவிபுக' என்னும் வெண்பாவில் வெண்ணெய்நல்லூரைச்சரராமனூர் எனப்பா டுதலால் சடையனினும் முற்படச் சரராமனது நன்றியே பாராட்டி னார் எனக் கருதற்கும் இடனாகும். சோழமண்டல சதகமுடையார், ஒருபான் கவிமுழுதும் வெண்ணைச்சடையன் புகழப்பட்டுளான் எனக் கருதியதும் தவறாகும். கம்பர் தம்மால் நன்றிபாராட்டிப்புக ழப்பட்டார் பலராகவும், நூல் இறுதியிற் சடையன் ஒருவனையே வாழ்த்தலும் தாம் சாகும்போதும் அச்சடையனது நன்றியே நினைந்

தருகுதலும் * பொருந்தாவாம். இவற்றால் அவ்வொருசாரார்கூற்றுப் பெரிதும் ஐயப்படுதலுடைத்து. மழையென்றுசங்கைகொண்ட கொடைமீளியண்ணலும், மண்ணவர் வறுமைநோய்க்கு மருந்தானவனும், பாரிலுள்ளோர் பலர்க்குக் கண்போன்றவனும், திரிகர்த்தன் எனப் பட்டம்பெற்றவனுமாகிய வெண்ணெச்சடையனொருவனே சராமன், கண்ணன் என்னும் பெயர்களானும் விளங்கினோன் எனக் கருதுதற்கண் மேற்காட்டிய இடையீடொன்றும் எய்தாமையும் பலவற்றுக்கும் பொருந்தியதாதலும் ஆராய்ந்துகொள்க. இவர்,

"புவிபுகழ் சென்னிபோ ரமலன் றோள்புகழ்
கவிகடம் மனேயெனக் கனக ராசியுஞ்
சவியுடைத் தூசுமென் சாந்தும் மாலையு
மவிரிழைக் குப்பையு மளவி லாதது."

(கிட்கிந்தாகாண்டம், பிலநீங்குபடலம்.)

"சென்னிநாட் டெரியல் வீரன்றியாகமா விநோதன் றெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப் புலன்கொள நோக்கிப்போனான்."

(யுத்தகாண்டம், மருத்துமலைப்படலம்.)

எனப்பாடுதலான் இவரைச்சிறப்பித்துயர்த்திய சோழனும் இவரால் நன்றி பாராட்டப்பட்டுளான் என்பது அறியலாகும். இனி யிவர் இராமாவதாரம் அரங்கேற்றியது திருவரங்கப் பெரியகோயிற்கண்ணே யென்பதும் அந்நாள் பங்குனி உத்தரமாம் என்பதும்,

திண்மையேறுங் கம்பனிடஞ் செய்யத்தகும்பல் சிறப்பயர்ந்து
நண்மையேறு மிராமகதை நற்பேர்புவியிற் றழைத்தேற
வுண்மையேறுந் திருவரங்கத் தொருவன்சபையி லுத்தரநாள்
வண்மையேற வரங்கேற்றி வைத்தார்சோழ மண்டலமே.

[மேற்கோள்.]

"பண்ணிய விராமகாதை பங்குனி யுத்தரத்திற்
கண்ணிய வரங்கர்முன்னே கவியரங் கேற்றினானே."

என்பனவற்றானறியப்படும். பங்குனியுத்தரநாள் சீராமமூர்த்தியின் திருக்கல்யாண தினமாதலால் அதனையே தாம்பாடிய இராமாவதாரம் அரங்கேற்றுதற்கு உரிய மங்கலநாளாகக் கொண்டனராவர்;

---

* இது மேலுணர்த்தப்படும்.

பங்குனி யுத்தர மான பகற்போ
தங்க ணிருக்கினி லாயிர நாமச்
சிங்க மணத்தொழில் செய்த திறத்தான்
மங்கல வங்கி வசிட்டன் வகுத்தான். (கடிமணப்படலம்.)

எனக்கூறியதனையும் நோக்கிக்கொள்ளுக. 'பங்குனி யத்த நாளில்' என்னும் பிரதிபேதமுமுண்டு. அது சோழமண்டலசதகத்துக் கூறப்பட்டதனோடுமாறுபடுதலையும் பங்குனியுத்தரம்போலச் சிறவாமையையும் தேர்ந்துகொள்க. இவர் சோழனது அவையிலரங்கேற்றாமற் பெரியகோயிலையே அதற்கேற்ற நல்லவையாகக் கருதியதனானே, இவர் அரசவையினும் அறிவுடையந்தணரது நல்லவையையே பெரிதும் மதித்தனரென்பதும், ஒருவரான் வேண்டப்படாமற் றாமே தமது சிராமபத்திமுதிர்ச்சியாற் பாடிய பெருநூலாகலின் அதனை அப்பெரியகோயிற் கடைத்தலைபற்றிவாழும் பரமபத்தர்களான அரியபெரியார்கள் திருச்செவிகளில் ஏற்பிக்கவே உள்ளமுவந்தனரென்பதும் நன்குணரலாகும். இவர் இராமாவதாரம் அரங்கேற்றுதற்காகத் திருவரங்கப்பெரியகோயிலையெய்தி ஆண்டைப் பிரணவாகார விமானத்து அறிதுயிலமர்ந்த கருணைமாமுகிலைச் சேவித்து நின்றபோது அவ்விறைவன், இவரது பத்திக்குவந்து இவரைத் தன்னடியார்க்கு ஆட்படுத்தக்கருதி *'நஞ்சட கோபனைப் பாடினையோ' என்று அருச்சகர் முகனாய்த் திருவுளம்பற்றித் தமிழ்மகளின் தவப்பேறனைய சடகோபரது பரமஞானபத்தியதிசயத்தை இவர்நெஞ்சிற் றோற்றுவித் தருளினான். அப்போதே இவர் அவ்வாழ்வாரது திருக்கோயின்முன்றிலிற் புக்குப் பணிந்துகிடந்தார்க்கு ஆழ்வாரதுதிருவருணோக்கம் உண்டாயிற்று. அங்கிலையிலெழுந்து ஆழ்வாரைப்போற்றி 'வேதத்தின் முன் செல்க' என்றெடுத்துத் தேனெனப்பாலெனச் சில்லமிழ் தூற்றென ஒருநூறு செய்யுள் அந்தாதியாகப்பாடி ஆழ்வார்க்கடியராய்ச் சிறந்தனர். இதன்பின்னேதா னிராமாவதாரவரங்கேற்றம் சிறப்பாக நிறைவேறியதென்ப. இவர் சடகோபரந்தாதிக்கண்,

"பாவைத் திருவாய் மொழிப்பழத் தைப்பசுங் கற்பகத்தின்
பூவைப் பொருகடற் போதா வமுதைப் பொருள்சுரக்குங்

* சடகோபரந்தாதி, பாயிரம்.

கோவைப் பணித்தவெங் கோவையல் லாவென்னைக் குற்றங்கண்டென்
னாவைப் பறிப்பினு நல்லோரன் றோமற்றை நாவலரே."

எனப்பாடுதலால் இவர் இராமாவதாரம் அரங்கேற்றப் புக்கபோது திருவரங்கத்துள்ள பெருநாவலர்கள் இவர்க்கு ஆழ்வார் சம்பந்தமில்லாமைபற்றி இவர்பாற் பலகுற்றங்காணத் தலைப்பட்டனரெனவும் ஆழ்வாரைப்பாடி யடியராயபின்னே தான் இவர் அவர்களால் அபிமானிக்கப்பட்டனரெனவும் கொள்ளத்தகும். இவர் ஆழ்வாரால் அருளப்பட்டனரென்பது,

இழைத்தா ரொருவரு மில்லா மறைகளை யின்றமிழாற்
குழைத்தார் குருகையிற் கூட்டங்கொண் டார்கும ரித்துறைவர்
மழைத்தார் தடக்கைக ளாலென்னை வானின்வரம் பிடைநின்
றழைத்தா ரறிவுந்தந் தாரங்கும் போயவர்க் காட்செய்வனே.

நாய்போற் பிறர்கடை தோறு நுழைந்தவ ரெச்சினச்சிப்
பேய்போற் றிரியும் பிறவியி னேனைப் பிறவியென்னு
நோய்போ மருந்தென்னு நன்றிருவாய்மொழி நோக்குவித்துத்
தாய்போ லுதவிசெய் தாய்க்கடி யேன்பண்டென் சாதித்ததே.

என இவர் பாடுதலான் நன்கறியலாகும். இவர் ஆழ்வாரது திருவாய்மொழியினை எவ்வளவாக மதித்தனரென்பது

பண்ணுந் தமிழுந் தவஞ்செய் தனபழ நான்மறையு
மண்ணும் விசும்புந் தவஞ்செய் தனமகிழ் மாறன்செய்யு
ளெண்ணுந் தகைமைக் குரியமெய் யோகியர் ஞானமென்னுங்
கண்ணும் மனமுஞ் செவியுந் தவஞ்செய்த காலத்திலே.

* உரிக்கின்ற கோடலி னுந்துகந் தம்மென வொன்றுமின்றி
விரிக்குந் தொறும்வெறும் பாழாய் விடும்பிறர் புன்கவிமெய்
தெரிக்கின்ற கோச்சட கோபன்றன் றெய்வக் கவிபுவியிற்
சுரிக்கின்ற நுண்மண லூற்றொக்குந் தோண்டச் சுரத்தலினே.

என்னும் இவர்பாடல்களான் உணரப்படும்.

---

* 'கோடலுரிபோ லாராயினே துமிலையாதி' (நாகபாசப்படலம்-உசுக) என இவ்வுவமை இராமாவதாரத்தும் வந்தது கண்டுகொள்க.

தேவிற் சிறந்த திருமாற்குத் தக்கதெய் வக்கவிஞன்
பாவிற் சிறந்த திருவாய் மொழிபகர் பண்டிதனே
நாவிற் சிறந்தநம் மாறற்குத் தக்கநந் நாவலவன்
பூவிற் சிறந்தவாழ் வான்கம்பநாட்டுப் புலமையனே.

என்னுஞ் சடகோபரந்தாதிப் பாயிரத்தான் அத்திருவரங்கத்துள்ள பெரியாரெல்லாம் இவரை நம்பெருமாளுக்கு உரியராகிய நம்மாழ்வார்போல, நம்மாழ்வார்க்குரியராகிய நந்நாவலரென்று * உரிமையினுயர்த்தி அன்புபாராட்டினரென்பது தேறப்படும். நன்னாவலவன் என்றும் பாடமோதுவாருமுளர்.

இனிச்சில இராமாயண ஏடுகளில் விடைகொடுத்த படலத்தின் பின் சில அரிய செய்யுட்கள் வரையப்பட்டுள்ளன. அவையாவன,

நாராயணாய நமவென்னு நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காராரு மேனிக் கருணா கரமூர்த்திக்
காரா தனையென் னறியாமை யொன்றுமே.

பராவரு மிராமன் மாதோ டிளவல்பின் படரக் கான்போய்
விராதனைக் கரனை மானைக் கவந்தனை வென்றி கொண்டு
மராமரம் வாலி மார்பு துளைத்தனை வகுத்துப் பின்ன
ரிராவணன் குலனும் பொன்ற வெய்துட னயோத்தி வந்தான்.

வான்வளஞ் சுரக்க நீதி மநுநெறி முறையெந் நாளுந்
தான்வளர்ந் திடுக நல்லோர் தங்கிளை தழைத்து வாழ்க
தேன்வளர்ந் தறுத மாலைத் தெசரத ராமன் செய்கை
யானளந் தறிந்த பாட லிடையறு தொளிர்க வெங்கும்.

ஆவின் கொடைச்சகர ராயிரத்து நூறொழித்துத்
தேவன் றிருவழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்
சீரார் குணாதித்தன் சேயமையப் பாடினான்
காரார்கா குத்தன் கதை.

தாரதலத்தி னுள்ள தமிழ்க்குற்ற மெல்லா
மராவு மரமாயிற் றன்றே—யிராவணனை
யம்பினால் வீழ்த்தா னடிபணியு மாதித்தன்
கம்பனு டாள்வான் கவி.

---

* "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை, யென்ப ரவரவர்தம் மேற்றத்தால்" (உபதேசரத்தினமாலை) என்ப.

ஆதவன் புதல்வன் முத்தி யறிவினை யளிக்கு மண்ணல்
போதவ னிராம காதை புகன்றருள் புனிதன் மண்மேற்
கோதவஞ் சிறிது மில்லான் கொண்டன்மா றன்னை யொப்பான்
மாதவன் கம்பன் செம்பொன் மலரடி தொழுது வாழ்வாம்.

இம்பரு மும்பர் தாமு மேத்திய விராம காதை
தம்பமா முத்தி சேர்தல் சத்தியஞ் சத்தியம்மே
யம்பரந் தன்னின் மேவு மாதித்தன் புதல்வன் ஞானக்
கம்பன்செங் கமல பாதங் கருத்துற விருத்துவாமே.

இவற்றுள்; முதன்மூன்றுங் கம்பர் பாடியனவாமெனத் தோற்றுகின்றது. மற்றைநான்கும் பிறர்பிறர் கூறியனவாகும். இறுதிச்செய்யுளில் 'ஆதித்தன்புதல்வன்' எனவருதலானும், அவ்வாதித்தன் என்னும்பெயரே மற்றையிரண்டு வெண்பாக்களிலும் பயிறலானும் கம்பர் தந்தையார்க்கு ஆதித்தன் என்பது பெயராமெனத் தெரிகின்றது. இதுபற்றியே "தராதலத்தினுள்ள" என்னும்பாட்டில் 'ஆதித்தன் கம்பன்' என வழங்கினர் என்று அறியப்படுகின்றது. இது சங்கரன் புதல்வனான சடையனைச் 'சங்கரன் சடையன்' என வழங்கியதுபோல்வது. ஆதவன் என்பது ஆதித்தனென்பதற்குப் பிரதிநாமமாதலால், இவரை, "ஆதவன்புதல்வன்" எனவும் வழங்கினராவர்.* 'ஆவின் கொடை' என்னுஞ் செய்யுளில் "திருவழுந்தூர் நன்னாட்டு மூவலூர்ச் சீரார் குணாதித்தன்சேய்" எனவருதலால், இவருடைய தந்தையார் திருவழுந்தூர்நாட்டு மூவலூரில் வசித்தவரெனத் தோன்றுவது. கம்பர்பிறந்தவூர் திருவழுந்தூர் என்பது நன்கு தெளியப்பட்டதாதலின் அவ்விரண்டூர்களிலும் இவர்தந்தையார் இருந்தனராவரெனக் கருதப்படுகின்றது. திருவழுந்தூரும், மூவலூரும் மிகவும் சமீபமான ஊர்களென்பதும் உணர்க. மேற்காட்டிய வெண்பாக்களிரண்டும், இவர் இராமாவதார மரங்கேற்றிய காலத்து ஆண்டிருந்து கேட்டோர் பாடியனவாமெனக் கொள்ளத்தகும். (இன்னும் வரும்)

இங்ஙனம்,

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

---

* மதுரையிற் செல்லத்தம்மை கோவிற் பூசகர்கள் கம்பர் வழியினரென்று கொண்டு தங்களைச் சூரியகுலத்தவரெனக் கூறுகின்றனர், அஃது இவ்வாதித்தன் என்னும் பெயர்பற்றி யாகுமெனத் தோன்றுவது.

# "வீரகல், மாஸ்திகல்"

மைசூரைச்சேர்ந்த சிவமுகி, ஹாஸநம் ஜில்லாக்களிலும், சேலம் வடஆற்காடு ஜில்லாக்களின் சிற்சிலபாகங்களிலும் இருதிறமான சிற்பக்கற்கள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. அவைகளை அவ்விடத்தார் முறையே வீரகல், மாஸ்திகல்களென்றுபேர்கூறுகிறார்கள். இவற்றுள் (1)வீரகல்லென்பது ஒழுங்குசெய்தேனும், அப்படிச்செய்யாமலேனும் இருக்கும் ஓர் பலகைக்கல். இக்கல்லில் சாதாரணமாக ஒரு வீரனைப்போன்ற பிம்பமொன்று சிற்பித்திருக்கும். வெகு புராதன வீரகல்லில் ஒரேபடிமம் காணப்படுகின்றது. இதன் தலைப்பில் ஓர்சிறு சாஸனம் எழுதப்பட்டிருக்கும் (இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும் படத்தில் 1-வது கல்லை, மேல்விவரத்துடன் ஒத்திட்டுப்பார்க்க)

பிற்காலத்திற்செய்யப்பட்ட வீரகல்கள் வெகுவிவரமாய்ச் சிற்பித்திருப்பதுடன் எழுத்துக்களும் சமனாகச்செய்தபாகத்தில் அடித்திருக்கும் (படத்தில் 2-வது கல்லைப்பார்க்க). ஒவ்வோர் அறையின் இடைவெளிகளிலும் இவ்வெழுத்துக்களைக் காணலாம். இக்கல்லின் கீழறையில் இடதுபக்கத்தில் மூன்றுபசுக்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அவை, பெரி நாய்காட்டியிருக்கும் வீரன்பக்கத்திலிருப்பதுடன் அவன் பின்னேக்கியுஞ்செல்கின்றன. இப்பெருவீரனே அவ்வறையிற் காட்டியிருக்கும் சண்டையில் வெற்றியடைந்ததற்பின் மடிந்தவன். இவன்பொருட்டே, இக்கல், இவனை ஆவாஹனஞ்செய்து நாட்டப்பட்டது.

மேலறையில், இவன் அப்ஸரஸ்ஸு ஸ்திரியிருவரால் தாங்கப்பட்டு சுவர்க்கலோகத்துக்கு அழைத்துக்கொண்டு போகப்படுகிறான். இப்பெண்களிருமருங்கும் வெண்சாமரம் வீசுகிறார்கள்.

முதலறையில் இவனே, வீரசுவர்க்கத்தில் பகவத்சன்னிதானத்தில் அவரை தியானித்துக்கொண்டு நிற்கிறான். இடதுபக்கத்துக் காமதேனுவும், சூரியனும், வலப்பக்கத்துசந்திரனும் காட்டப்பட்டுள்ளன.

---

(1) இவ்வார்த்தைகள் அவ்விடத்தார் வழங்குவதுபோலவே உபயோகிக்கப்பட்டிருக்கின்றன,



இடைவெளிகளில் வெட்டியிருக்கும் எழுத்துக்கள், இவ்வீரன் மடிந்தகாரணத்தை கூறுகின்றது. இவ்வீரகல்கள் பூசலிலாயினும், நிரைமீட்சிகளிலாயினும், வேட்டையிலாயினும் மடிந்த வீரர்களுக்காக நடப்பட்டுவந்தன. மடிந்தகாரணமுதலியவற்றைக் குறிக்கும் சாஸனங்களின் சுவரூபத்தை விளக்குதற்பொருட்டு அடியிற்சில உதாரணங்கள் காண்பிப்போம்; அவைவருமாறு;—

(1) ஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேசரிவன்மற்கு யாண்டிரு பத்தொன்பதாவது பெருமானடிகளான் முக்குட்டேர்கொள்ள மீட்டுப்பட்டான் வதுனவாரன் வரதன்தாண்டன். (1)

(2) ஸ்ரீ கோவிசைய நிருபதொங்க விக்கிரம பன்மற்கு யாண்டிருபத்தாருவது படுவூர்கோட்டத்து மேலடையாறுநாட்டு ஆமையூர் மேல்நுளம்பன்படைய வந்துதொறுக்கொள பிருதிகங்கரையர் சேவகர் பெருநகரகரக்கொண்டக்காவிதி அகளங்கத்துவராயர் மகன் சனன் தளராவிழுந்துபட்டான்.

(3) ஸ்வஸ்தி ஸ்ரீமத் புஜபலசக்ரவர்த்தி பிஜ்ஜண தேவரஸ்ய ஸுகஸங்கதா விநோதேந ராஜ்யம் குர்வதி | வநவாஸி தண்டநாயக பத்மரஸ நியோகேந தக்ஷிணகேதார தேவர பாதாராதகரான வாமசக்தி தேவான் பந்திய, ஸ்திதவதி தொணவதிஸ்த மெறெகார பாபெய நாயகாஹவம் க்ருத்வா ஸ்வர்க்கஸ்தே அளிய மதிகெய பாபெயகல்லு நடிஸி வீரசாலெய மாடிஸிதா | ஸ்ரீ.

---

(1) இச்சாஸனமுங் கீழ்வருவதும் எபிகிராபியா இண்டிகாவிலிருந்து எடுக்கப்பட்டன.

(1) ஸ்வஸ்தி ஸ்ரீமது புஜபலசக்கரவர்த்தி (யாகிய) பிஜ்ஜணதேவாசர் சுகமாயும் புத்தியோடும் ராஜரீகம்செய்து (கொண்டு) இருக்க, வன்வாசி நாட்டுத்தண்டநாயகனாகிய பத்மரசன் ஏவலால் தக்ஷிணகேதாரத்துத் தேவர் பாதாராதகராகிய வாமசக்திதேவரைக்கட்டிப்பிடித்ததில், தொணவத்தியிலிருக்கும்மெறெகாறனாகிய பாபெயநாயகன் செருச்செய்து ஸ்வர்க்கஸ்தனானதற்கு, மருமகன் மதிகெயபாபெயன் கல்லைநட்டு வீரசாலையை எடுப்பித்தான்.

இனிமடிந்த வீரர்களுக்குக் கன்னடும்விஷயத்தைக்குறித்து தமிழிலக்கியங்களில் நாம் பலவிடங்களிற் கண்டவற்றை அடியில் எம்மாலியன்றமட்டும் எடுத்துக்காட்டி இப்புராதனமான தமிழ்நாட்டுவழக்கத்தை விளக்குவோம்.

தமிழிலக்கணங்களுள்ளெல்லாம் மிகப்பழையதான தொல்காப்பியத்தில், பொருளதிகாரம், புறத்திணையியல் 60-வது சூத்திரத்திறுதியில், போர்முதலியவற்றுட்பட்டு வீழ்ந்தோர்க்குக்கன்னடுதலைக் குறித்து,

> " காட்சி கால்கோ ளீர்ப்படை நடுகல்
> சீர்த்த மரபிற் பெரும்படை வாழ்த்தலென்
> றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
> சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தே "

என்று வர்ணித்திருத்தலை உரையாசிரியர் பற்பலஉதாரணங்களாலும் தெளிவுறுத்தியதைக்கொண்டு கன்னடுதல் முதலியவற்றின் இலக்கணத்தைக் கூறுவோம்.

போரில் மடிந்த வீரனைக்குறித்து, இவன் உற்றார் நண்பர் பலர் கூடி " கல்கெழுசுரத்திற் சென்று கற்கண்டு " அதுகொணர்ந்தபின் அக்கல்லினை நீரிற்படுத்துத் தூய்மைசெய்து, பின்னர்ப்பெரும் பீடும் எழுதிநாட்டி,

> "காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீ ராட்டிப்
> பூப்பலி பெய்து புகைகொளீஇ—மீப்படர்ந்த
> காளை நடுகற் சிறப்பயர்ந்து "
> " நெய்ந் நறை கொளீஇ "

பிறகு அக்கல்லைத் தெய்வமாகப் பாவித்து அதற்குப் பெருஞ்சிறப்புக்களைப்படைத்து வாழ்த்திக்கோயில் கொடுபுகுவது வழக்கம். இவ்விடத்திலிதனை நட்டு இதைச்சூழ வீரசாலை என்று ஒரு கட்டிடமெடுத்து, பின் பாணர்களைக்கொண்டு மடிந்தவீரன் சீர்த்தியைப்பாடுவிப்பதும் வழக்கமாயிருந்தது. இவ்விஷயங்களைச்சுருங்கச் சூத்திரரூபத்தில் அடியில்வருமாறு எழுதினர் ஐயனரிதனர் தம் புறப்பொருள் வெண்பாமாலையிலும்:—

"ஆறு வென்றி அமரில்வீழ்ந் தோற்குக்
கானநீளிடைக் கற்கண் டன்று.

"மண்மருளத் துடிகறங்க
விண்மேயாற்குக் கற்கொண்டன்று.

"வண்டுசூழ் தாமம் புடையன வாகக்
கண்டு கொண்ட கன்னீர்ப் படுத்தன்று.

"அவன்பெயர் கன்மிசைப்பொறித்துக்
கவின்பெறக் கன்னாட்டின்று.

"நிழலவி ரெழின் மணிப்பூட்
கழல்வெய்யோன் கல்வாழ்த்தின்று.

"வேத்தமருள் விளிந்தோன் கல்லென
வேத்தினர்துவன்றி யிற்கொண்டுபுக்கன்று."

இவ்வாறு கன்னடுதல் என்னும் பொருளையே உள்ளடக்கித் திருக்குறளாசிரியர் "என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை, முன்னின்று கன்னின் றவர்" என்று எழுதியிருக்கிறார். இதற்குப் பரிமேலழகர், "பகைவரே! என்னுடையதலைவனெதிர் (போரேற்று) நின்று (அவன் வேல்பட்டு வீழ்ந்து) கல்லினிடத்தே நின்ற வீரர் பலராவார்; (நீர் அதனிடத்து நில்லாமல் உம்முடலிலே நிற்கைவேண்டின்) என்னுடைய தலைவனெதிர்(போரேற்று)நில்லாதேயுங்கள்" என்று பதவுரையாலும், "கல்-போரில் வீரர் இறந்தவிடத்து அவ ருருவஞ்செய்து நடப்படுதல்; ஒரு வீரன் தன்மறம் அரசன்மேல் வைத்துச் சொல்லியபடி" என்னும் குறிப்பாலும் தெரிவித்தார்.

பத்துப்பாட்டு மலைபடுகடாத்துள் "நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர், செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட, கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே" என்றிருப்பதனுக்கு, ஆசிரியர் நச்சினார்க்கினியர் "கெடாதநல்ல புகழினையுடைய பெயர்களை எழுதி நட்ட கற்கள் முதுகிட்டுப்போனவர்களை யிகழும் பலவழிகள் எண்ணுதல் மிகும்படி பலவாயிருக்கும்" என்றப்பொருள்செய்திருத்தலும் காண்க.

வீரகல் நடுவனதைக்குறித்து அகப்பாட்டிலும் (131) "ஆடவர், பெயரும் பீடு மெழுதி யதர்தொறும், பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்" எனவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

கோப்பெருஞ் சோழனிறந்து கன்னடப்பட்டானென்று கேள்வியுற்று, அது நட்டவிடத்திற்போய் உறையூர்கண்ட பொத்தியார் பாடிய 221-ம் புறச்செய்யுளில்,

"கெடுவி னில்லிசை சூடி
நடுக லாயினன் புரவல னெனவே"

என்பதற்கு "கேடில்லாத நல்ல புகழ்ச்சிமாலையைச் சூடிநடப்பட்டகல்லாயினன், எம்மைப் பாதுகாப்போனெனச் சொல்லி" என்று உரைகாரர் பொருள் கூறியுள்ளார்.

கி-பி. 11-ம் நூற்றாண்டின் கடைக்காலில் அரசாண்ட சோழ சக்கரவர்த்தியாகிய வீரசோழன் என்று மறு பெயர் பூண்ட வீரராஜேந்திரன் காலெத்தெழுதிய வீரசோழியத்தில், புத்தமித்திரனர்,

" துகளறு கற்றேடாப் பொறித்தல் காந்தைத்திறம்"

என்றிவ்விஷயத்தைக்குறிப்பாகக்காட்டியிருத்தற்கு, உரையாசிரியர் பெருந்தேவனர், "துகளறுகற்றேடுதலும், பொறித்தகல்லு நீருட்குளிப்பித்தலும், கன்னடுதலுமாம்" என்று விரித்துரை எழுதினர்.

சுரம்போக்கலுக்குதாரணமாய் நாயகிக்கு நாயகன், நட்டகல்லின் பெருமையைக்குறித்துச் சொல்லுவதைக்கல்லாடத்திலும் காணலாம்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்குமுன் எழுதிய இலக்கணவிளக்கத்துள்ளும் வைத்தியநாததேசிகர் இவ்வழக்கத்தை எடுத்துக்காட்டியிருக்கிறர். அதாவது,

"களத்திடை வீழ்ந்தோர்க்குக் கற்கண் டிடுதலுங்
கற்கோ ணிலேயுங் கன்னீர்ப் படுத்தலு
மற்றவை நிரைத்த வத்துறைப் பகுதியுங்
கன்னட் டுதலுங் கன்முறை பழிச்சலும்,
பொன்னு ரிற்கொடு புகுதலும்" (சூத்திரம்-619).

ஆயின் இவ்வழக்கம் இவர்காலத்திருந்திலது; பழைய வழக்கத்தை இவர் விளக்கி எழுதினரே ஒழிய வேறில்லை.

இவ்வாறு இன்னம் பற்பலவிடங்களிலும் இவ்வழக்கத்தைக் குறித்தமேற்கோள்கள் பலவாகக் காணலாம். இவ்வழக்கம் கொடுந் தமிழாகிய கன்னடம் வழங்கிய தேசத்திலும், அதை அடுத்தவிடங்க ளிலுமே காணப்படுதலின் தமிழரசர்க்கும் குந்தளர் முதலிய கன்ன ட ராஜர்களுக்கும் பொதுவானயுத்தகளங்கள் அவ்விடங்களேஎனத் தெரியவருகின்றது. வடதேசங்களில் இக்கல்லிருப்பதாகக் காணோ ம். ஆகவே இது தமிழர்க்கே உரித்தானது என்பதற்கையமில்லை.

(இன்னும் வரும்.)

து. அ. கோபிநாதராவ்.

---

# செல்வம்.

(செந்தமிழ் ௩-ம் பகுதி. ௩௬-ம் பக்கத்தொடர்ச்சி,)

பிறரிடத்திற் கூலிவேலை செய்து இடர்ப்பட்டுப் பிழைப்பவர் கள் தங்கள் வருமானத்திற் சிறிது நிலுவைபிடித்துச் சேர்த்துவந் தால், அச்சேர்மானத்தைக்கொண்டு தாங்கள் சிலகாலத்தில் சுவதந் தரராகித் தங்கள்மட்டிலே ஏதாவது ஒருதொழின்முயற்சி செய்து ஜீவிக்கலாம். ஊதாரிகளான எசமானரிடத்தில் உத்தியோகஞ்செய்ப வர் எத்தனைபேர். இங்ஙனம் சுவதந்தரர்களாக, அவ்வெசமானர் பரத ந்தரராவதை நாம் காண்கிறோம். 'என்வர்த்தகசாலையில் வேண்டுமள வுக்கு அதிகமாகவே இலக்கர்களும் மற்ற ஆள்களும் இருத்தலால் உன்னை வைத்துக்கொள்ள அவசியமில்லை' என்ற சாவகாரியின் வார் த்தையைக்கேட்டு மனம்புழுங்கித் தலைகுனிந்து திரும்பிச்செல்கையி ல், கீழே விழுந்துகிடந்த ஒருகுண்டூசியைக்கண்டு, சிறுதுரும்பும் பல் லுக்குத்தவுதவுமாகையால் இந்த ஊசியும் ஓர் ஆபத்துக்கு உதவுமெ ன்று அதையெடுத்துத் தனது உடையில் செருகிக்கொண்ட லப்பீட் என்பவன், அதுவே வியாஜமாக அந்தச்சாவகாரியிடம் வேலையிலமர் ந்து, தனதுஉழைப்பினாலும் யோக்கியதையாலும் அவ்வர்த்தகசாலை

யில் மேன்மேலுயர்ந்து தலைமையுத்தியோகஸ்தனுகி, கடைசியில்தான் சேர்த்துவந்த சேர்மானத்தின் உதவியால் வர்த்தகத்தில் பாகஸ்தனுய் அப்பால் தனியே ஒரு வர்த்தகசாலையு மேற்படுத்திக்கொண்டு, இறந்துபோன சாவகாரியின் மைந்தனுக்கு நன்றியறிவுடனே பொருளுதவியும் செய்துவந்தான்.

தானமது விரும்பு. தருமத்துக்குத் தாழ்ச்சிவராது. தருமத்துக்கு அழிவு சற்றும் வராது. தருமமே தலைகாக்கும். ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர். ஈயாதார்வாழ்ந்தென்ன இண்டஞ்செடி தழைத்தென்ன?

அற்ருரழிபசிதீர்த்தலஃதொருவன்
பெற்ருன்பொருள்வைப்புழி.

தொழில்செய்து சீவனம்பண்ணச் சக்தியிருக்கவும் அது செய்யாத சோம்பேறிகளுக்கு யாதோருதவியும் செய்யலாகாது. குருடர் முடவர் முதலான அங்கவீனமுள்ளவர்களுக்கு அவசியமான உதவிகளை இயன்றமட்டில் செய்யவேண்டும். பாத்திரமறிந்து பிச்சையிடு (கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு). ஒருவர் நமக்குச்செய்த நன்மைக்குப் பிரதியாக ஒருநன்மை செய்வது உபகாரமன்று. 'மாறீவார்க்கீதல் பொலிகடனென்னும் பெயர்த்து'

வறியார்க்கொன் றீவதேயீகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

தன்னளவிலே முட்டுப்பாடுடையவன் தருமஞ்செய்வதியலாது. தனக்குக்கண்டு தானம் வழங்கவேண்டும். தாய்தந்தையர் பொருளின்றி வருந்தாநிற்கத் தநயர்கள் வேற்றயர்க்குத்தானஞ்செய்வது கிரமமாகாது. ஆத்தாள் அம்மணமாக இருக்கக் கும்பகோணத்தில் கோதானமா? நம்முடைய உறவினரில் கொந்திருப்பார்க்கு உதவி செய்யாமல் மற்றவர்க்கு உபகாரஞ்செய்வதும் பேதைமையே. "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்"

ஏதிலாரார்த்தமர் பசிப்பர்பேதை
பெருஞ்செல்வ முற்றக்கடை.

குடும்பச்செலவிற்குரியதுபோக இங்ஙனம் உறவினர் முதலியோர்க்

குச் செயக்கடவ கடப்பாடுகளைச்செய்து எஞ்சிய பொருளை வறியார்க்கு ஈதற்குரியது.

இடனில்பருவத்துமொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

பாழாய்ப்போகிறது பசுவின்வாயிலே போவதுநன்றே. பாழாய்ப்போகிறதைப் பசுவின்வாயி லிடுவது மாத்திரமே தருமமாகாது. தனது பதவிக்குரிய செலவுகளிலும் தனக்குரிய சௌகரியங்களிலும் அநாவசியமான சிலவற்றைக் குறைத்தாயினும் தான் கருதிய நன்மையை மனப்பூர்வமாய்ச் செய்வதே தருமசிந்தையோடு செய்வதற்கு அறிகுறி.

இல்லா விடத்து மியைந்த வளவினால்
உள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு.

இத்தகைச் சிந்தையுடையவனுக்குத் தரித்திரமாவது—

நயனுடையானல்கூர்ந்தானுதல்செயுநீர
செய்யாதமைகலாவாறு.

ஆயினும்,

உரைப்பாருரைப்பவையெல்லாமிரப்பார்க்கொன்
றீவார்மேனிற்கும்புகழ்.

ஆதலின், தானே பிரதிஷ்டையை விரும்பித் தானஞ்செய்ய வேண்டா.

மனத்துக்கண் மாசிலனாதலனைத்தறன்
ஆகுலநீரபிற.

நமது நூல்கள் வரையறுத்திருக்கும் தானவகை முப்பத்திரண்டில் சிலவற்றை இக்காலத்தவர் ஏற்புடையனவாகக்கொள்ளார். அங்ஙனந்தள்ளுபடியாயின போக ஏனையவற்றிற்பல வெகு ஜனநன்மைக்குரியனவே. ஏழைகள் தங்களளவில் தனித்தனியாகவும் பலர்கூடி ஒருமிக்கவும் தேடிக்கொள்ளமுடியாத நன்மைகளைத்தேடுவதே செல்வர்கள் செய்தற்குரிய சிறந்ததானம். செல்வர்களும் தங்களளவில் தனித்தனியாக இப்படிப்பட்ட தானங்களைச்செய்து முடிக்க இயலா

விட்டால், பலசெல்வர்கள் ஒருங்குகூடி அவற்றை நிறைவேற்றுவது உசிதம். கல்விச்சாலை ஸ்தாபித்தல், தருமவைத்தியசாலை ஏற்படுத்தல், அநாதபிள்ளைகளைக் கல்வியுங் கைத்தொழிலுங் கற்பித்து வளர்த்துவிடுதல், திக்கற்ற விதவைகளுக்கு அன்னவஸ்திரங் கொடுத்தல், ஏழைகள் தீயொழுக்கத்தை விட்டு நல்வழியில் நடப்பதற்கான உபாயங்களைத் தேடுதல் என்றுற் போன்றனவே, இலக்ஷாதிகாரிகளும் கோடீசுவரர்களும் மேற்கொண்டு செய்யத்தக்க தருமங்கள்.

பம்பாயில் வசிக்கும் பாரசீகர்களில் மிகவும் எளிய குடியிற் பிறந்த ஜம்ஸெட்ஜீஜிஜிபாய் என்பவர், தமக்குக்கிடைத்த இரண்டு வெறுமையான குப்பிகளையே முதற்பொருளாகக்கொண்டு, குப்பி வியாபாரஞ்செய்து குபேரசம்பத்துடையவராயினர். மூன்றுபிள்ளைகளும் ஒரு பெண்ணும் பெற்றவராயினும், இவர் வெளிப்படையாகச் செய்த தானதருமங்கள்மாத்திரம் கோடிரூபாவுக்கு மேற்பட்டனவென்று கணக்கிட்டிருக்கிறது. ஏழைபேழைகளுக்கு இவர் நேரிற் செய்த சாதாரண தருமங்களுக்கு இவ்வளவென்று கணக்கில்லை. கல்விச்சாலைகளைக் கட்டுவதும், அவை நன்குநடத்தற்கான மூலதனத்தைக்கொடுப்பதும், தேவாலயங்களைப் பிரதிஷ்டைசெய்து திரவிய சகாயஞ் செய்வதும், தருமவைத்தியசாலை தருமசத்திரமுதலியவற்றைக்கட்டிப் பரிபாலித்தலும், புதிய பாதைகளை ஏற்படுத்தலும், பாலங்கட்டுவிப்பதும், ஏரிகுளங்களை வெட்டுவிப்பதும் ஆகியபலவித தருமங்களைச் செய்தனர். இந்தியாவின்மாத்திரமேயன்றி இதரமான தேசதேசாந்தரங்களிலும் தீவு தீவாந்தரங்களிலும் குடிகளின் கஷ்டநஷ்டங்களைத் தீர்க்கவும் அமிதமான திரவியசகாயஞ்செய்துவந்தனர். இவருடைய மனைவியாரும் இவற்றுக்கெல்லாம் இணங்கியிருந்ததுமன்றித் தம்முடைய செலவிலே சில பொதுநன்மையான தருமங்களைச் செய்தனராம். காஞ்சீபுரம் பச்சையப்பவள்ளலும் பி. டி. வி. செங்கல்வராய நாயகரும் தேவாலயம் தருமசத்திரம் கல்விச்சாலை அநாதபிள்ளைகள் பாடசாலை முதலியவைகளுக்கான சாசனங்களை எழுதிவைத்து என்றுமழியாது நின்று நிலவுதலான புகழுடம்பை எய்தினர். எங்கிலாந்திலும் அமெரிகாவிலும் சில தர்மிஷ்டர்கள் செய்துள்ள தானங்கள் புகழிலடங்குவனவல்ல.

தானங்கொடுப்பவ ரில்லையாயின் தானம் ஏற்பவருமிலராவர். தானம் ஏற்பவரில்லாராயின் தானங்கொடுப்பவரும் இலராவர். ஆயினும் உலகியல் அங்ஙனம் நடத்தலில்லை. அச்சையிலும் உண்டு பிச்சைக்காரன் அளகாபுரியிலும் விறகுதலையன் உண்டு.

"யாதும், கொள்வாரிலாமைக்கொடுப்பார்களுமில்லைமாதோ" என்றும், "எல்லாருமெல்லாப்பெருஞ்செல்வமுமெய்தலாலே, இல்லாருமில்லையுடையார்களுமில்லைமாதோ" என்றும், "என்றுமில்லாதனவுமிரவே" என்றுங்கூறுவனவெல்லாம் உயர்வுநவிற்சியணியே. கடப்பாடான ஒப்புரவுகளை ஏற்றுக்கொள்வது இகழ்ச்சியாகாது. வறுமையால் ஏற்பதிகழ்ச்சியே ஆயினும் எவரும் கசக்கிமோத்தலாகாது. புண்ணியத்துக்குழுதமாட்டைப் பல்லைப்பிடித்துப் பதம்பார்த்தலாகாது. கொடுப்பவர் திருப்தியாகக் கொடுத்ததை ஏற்றுக்கொள்பவரும் அகமலர்ச்சி முகமலர்ச்சியோடு வந்தனபூர்வமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லையேயென்று வருந்தலும் அருவருத்தலும் மடமை.

இரவலர் கன்றாக ஈவாரா வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை—விரகின்றி
வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.

விசேஷ செல்வத்தால் இன்பமும் அஃதில்லாமையால் துன்பமும் உண்டாகுமென்பதில்லை. எவ்வளவு இருந்தும் அவாவடங்காதவர்கள் எளியரே. வருந்தித்தேடியது சிறிது பொருளேயாயினும் அதனாலாகக்கூடிய சௌகரியங்களைத் தேடிக்கொண்டு திருப்தியாக அமைந்திருப்பவர்களே அஷ்டைசுவரியம் பெற்றவர்கள். போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து.

தி. செல்வக்கேசவராயமுதலியார்.

உ

# செந்தமிழ்க்குத்தொண்டுசெய்தவர்.

## ஆசிரியவிருத்தம்.

சீரிலகுமான்மணிப்பாய்சுமந்தான்கம்பர்சிவிகைபாண்டியனேந்தினான்
செல்வமிகுகச்சியப்பன்னுதைபொறுத்தனன்றிகழ்சுட்டிசோமனீந்தான்
றாருலவுகுமணனுந்தலைகொடுத்தான்சிவன்றானுமொருதூதுசென்றான்
சர்க்கரையுமெச்சில்வாய்கழுவினான்காளத்திதனதிருகைபுற்றிலிட்டான்
பேரிலகுகம்பையனும்விரலாழியீந்தனன்பெரியவன்பெண்கொடுத்தான்
பிணிமுகத்தோன்கீரனைப்புரந்தான்பேதைமுதிகிலனமொருவனிட்டான்
பாருலகிலித்தமிழ்க்குத்தொண்டுசெய்தபேர்பார்க்கிற்கணக்கில்லையே
பரராசர்பணிகின்றவண்ணாமலைக்குரிசில்பாதத்தைவருடினானே.

இச்செய்புள், இராமநாதபுரஞ் சமஸ்தானத்தில் ஓர்காலத்தில் மந்திரியாயிருந்த அண்ணாமலைப்பிள்ளை, இரகுநாதசேதுபதியவர்கள் மீது ஒரு துறைக்கோவை பாடியஅமுதகவிராயர் நித்திரைசெய்யும் போது அவர் பாதத்தைவருடக்கண்டு உணர்ந்தவுடன் அக்கவிராயர் கூறியதென்பர்.

இச்செய்புளிற் கூறிய ஏனைப்பன்னிருவர்க்குங் கதை வருமாறு.

### க. திருமான்மணிப்பாய்சுமத்தல்.

கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீயிங் கிராதே—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

ஓர் காலத்திலே காஞ்சீபுரத்திலரசாண்டிருந்த பல்லவராயன் என்னுமரசன்கணிகண்ணன் என்னுமோரடியாரைமதியாதுநாட்டை விட்டுப்போகச்சொன்ன காரணத்தால் அவர் தமது ஆசாரியராகிய திருமழிசையாழ்வார்பால் விண்ணப்பஞ்செய்து அடியேனிவ்விடம்விட்டுப்போகின்றேனென்றுகூற, அவ்வாறாகில்நாமுப்பெருமாளும்இங்கிருக்கப் போகின்றோமோவென்று பெருமாளைநோக்கி அத்திருமழிசையாழ்வார் இத்திருவெண்பாவைக்கூறியருளினர்; உடனே பெருமாள் அவர் பின்னெழுந்தருள இதையறிந்து அரசனும் வருத்த

முற்று ஓரிரவிருக்கை என்கின்றவூரிலே இவர்களைக்கண்டு வணங்கிக் கணிகண்ணரை வேண்டிக்கொள்ள அவரும் ஆழ்வாரை வேண்டிக் கொள்ள ஆழ்வாரும் பெருமாளை வேண்டியெழுந்தருளும்படி "கணி கண்ணன் போக்சொழிந்தான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீ கிடக்க வேண்டுந்-துணிவுடையசெந்நாப்புலவனும்போக்கெழுந்தேனீ யுமுன்றன், பைந்நாகப் பாய்படுத்துக்கொள்" என்று கூற அப்படி யே அங்குச்சயனித்தருளினர்; எனவோர் சரிதமுண்டு. இக்கவியிற் சில சொன்மாற்றிக் கூறுவாருமுளர். மீனாட்சியம்மை பிள்ளைத்தமி ழிற் காப்புப்பருவத்தில் "பழமறைகண்முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசுங்கொண்டலே" எனக்கூறியதனுமுணர்க.

## உ. கம்பர்சிவிகை பாண்டியனேந்தல்.

கம்பர் மதுரைச்சொக்கலிங்கசுவாமியைத்தெரிசித்துவரல்வேண் டுமென்று சோழராஜனிடம்கேட்டபோது அவ்வரசன்பாண்டியனைப் பாடாது போய்வரல்வேண்டுமென்று கூறினன். கம்பருடன்பட்டு மதுரைக்குச்சமீபத்தில்வருகையிற் பாண்டியராஜன்றெரிந்து கம்பரி டத்திலெவ்வாறுயினுங்கவிகேட்டல் வேண்டுமென்றுகருதித்தன்மனை வியுடன் சென்று அவளருகிலேவரத் தான் கம்பர் சிவிகையைத்தாங் கினவளவிற் சிவிகை நிலைதளர்ந்தது. அதனைக்கம்பர் தெரிந்து மகிழ் ச்சிமீக்கூர்ந்து,

வெண்பா.

வாங்கு திரைகடலேழ் மஞ்சனநீர் வான்வரையி
னோங்கு மகாமேரு வுண்டியற்கல்—வீங்குபுக
ழிந்திரன்சம் பந்தி யிறையவனும் பண்டாரி
சந்த்ரகுல வங்கிசநீ தான்.

எனக்கூறிப்பின்னர் அவ்வரசன் மனைவியைப்பார்த்தபோது,

வெண்பா.

உமையாளு நீயு மொருங்கொப்பே யொப்பி
லுமையாளுக் குண்டங்கோ ரூன—முமையாடன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனுன்
னாகந்தோய்ந் தாண்டா னரசு.

எனக்கூறினர். பின்னர்ப் பாண்டியராசனாற் பெருஞ்சிறப்பெய் திச் சுவாமியைத்தெரிசித்துச்சென்றனர்; என்பர்.

## ௩. கச்சியப்பனுதைபொறுத்தல்.

வீரவநல்லூரிற்கச்சியப்பபிள்ளையென்னும் ஓர்பிரபுவினிடத்திலே சென்று ஓர்கவிஞர் பிரசங்கஞ்செய்தார். அதனை அப்பிரபு ப்ராமுகமாகக்கேட்டனர். உடனே கவிஞர்சினந்து மார்பிலுதைத்தனர். அதற்குப் பிரபு கோபமுறாது நல்லறிவுவருமாறு செய்ததன்றிவேறில்லையெனமகிழ்ந்து பிரசங்கங்கேட்டுச்சிவிகைமுதலிய சிறப்பளித்தனர். அப்போது கவிஞர் மகிழ்ந்து,

வெண்பா.

மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ லோபர்கடை காணுமா—விண்கடந்து
மெச்சியப்பா லும்புகழ்சேர் வீரைவல்லைக் காராளக்
கச்சியப்ப னையுதைத்த கால்.

## ௪. சோமன் சுட்டியீதல்.

தினகரராசாவின் புத்திரனாகிய சோமன் விளையாடிக்கொண்டிருக்குங்காலத்தில் வந்த ஓர் கவிஞர் அரசன் புத்திரனைக்கண்டு கையைவிரித்தருமைபாராட்டியழைக்க அவன் றன்னிடத்திலே யாசிக்கிறதாகக்கருதித் தன் றலையிலணிந்திருந்த சுட்டியை எடுத்து அக்கவிஞர் கையிற் கொடுத்தான்; இதனைத் தினகரவெண்பா என்னுமோர் நூலிலே,

வெண்பா.

கையை விரித்தழைக்கக் கண்டுகுழந் தைச்சோமன்
செய்யசுட்டி யீந்தான் றினகரா—பையவே
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

எனக் கூறியிருத்தலாற் காண்க.

## ௫. குமணன்றலைகொடுத்தல்.

தம்பியாலே நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றி யிருந்த குமணராசனைக் கண்டு பெருந்தலைச்சாத்தனர் என்னும் ஓர் பெரிய புலவர்,

ஆசிரியப்பா.

ஆடு நனிமறந்த கோடுய ரடுப்பி
னாம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்

பாஅ லின்மையிற் றேமலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயினிந்நிலை
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே.

என இச்செய்யுளைக்கூறினர். இதனரும் பதவுரை—ஆடு-அடுதல்; நீட்டல் விகாரமாயிற்று. கோடுயர்-புடையோங்கிய. ஆப்பி-காளான். தேம்புதல்-மெலிதல். உழவா-வருந்தி. திரங்கி-திரைந்து. இல்லி-துளை. மகத்துமுகம்-பிள்ளையின் முகம்; அத்து-சாரியை. ஈரிதழ்-ஈரிமை. எவ்வம்-வருத்தம். நிற்படர்ந்திசின்-நின்பால்வந்தேன். இந்நிலை தொடுத்துங்கொள்ளாதமையலென் - இவ்வாறு வறுமையுற்று நின்ற நிலைமைக்கண் வளைத்தாயினும் பரிசில் கொள்ளாது விடேன். பண் - பண்ணுதல். பச்சை நல்யாழ் - தோலாற் போர்க்கப்பட்ட நல்லயாழ். மண்ணார்முழவு-மார்ச்சனையமைந்த மத்தளம். வயிரியர் - கூத்தர். இன்மை - தரித்திரம். பின்னும்,

"ஆறு பெருக்கற் றருந்திடர்தான் பட்டாலு
மூறலமை யாதோ வுலகாற்றத்—தேற
வறியையே யானலு மென்கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமண செப்பு".

என இவ்வெண்பாவினையுங் கூறினதாகக் கூறுவர். பின்ன ரப்புலவரை நோக்கி என்றம்பி இளங்குமணனென்பான் என்றலை கொண்டு வந்தவர்க்குக் கோடிபொன் றருவதாகக் கூறியிருக்கின்றானாதலால் என்றலையை யறுத்துக்கொண்டு போயவன்பாற்கொடுத்துப் பொன் பெற்று வறுமை களைந்து வாழுமினெனப் பின்வரும் இரண்டு செய்யுளுங் கூறித் தன் கையிலிருந்த வாளாயுதத்தை அப்புலவர் கையிற் கொடுத்தான்,

### கலி விருத்தம்.

வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரஞ்
செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தா
னும்பர் நாடு முலகினுந் தேடினு
மெம்பி போலெனக் கியாரினி நல்லரே.

### ஆசிரியப்பா.

அந்தநாள் வந்திலை யருந்தமிழ்ப் புலவோ
யிந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே.

பின்னர்ப் புலவர் ஈதென்னை பாவமென்று வருந்தி அவ்வாளை மாத்திரம் வாங்கிக்கொண்டுவந்து இளங்குமணற்குக் காட்டிப் பின்வருமாசிரியப் பாவினைக் கூறினர்.

### ஆசிரியப்பா.

மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வ
ரின்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுத
லாடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றன னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையி
னாடுமலி யுவகையொ டு வருவ
லோடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.

இதனரும்பதவுரை ; இன்மையின் - வறுமையால். மாக்களில் - மாக்கள் போல. தொடர்பறியலர் - தம் பெயரை நிறுத்தி உலகொடு தொடர்ந்து போதுதலையறியார். படுமணி யிரட்டும்பூநுத லாடியல்

யானை - ஓசையையுடைய மணி ஒன்றற் கொன்று மாறியொலிக்கும் புகர் நுகர் நுதலையுடைய வென்றியியன்ற யானையை. பாடுநர்க்கரு காக் கேடினல் லிசை வயமான்றோன்றலை - பாவலர்க்கு மிகக் கொடுக்கும் அழிவில்லாத நல்ல புகழையுடைய வலிய குதிரையையுடைய தலைவனாகிய குமணனை. கொன்னே - பயனின்றியே. ஆடுமலி - வென்றிமிக்க. வருவல் - வந்தேன். ஓடாப்பூட்கையின் கிழமையோற் கண்டு - புறங்கொடாத மேற்கோளையுடைய நினக்குரியவனாகிய தமையனைக்கண்டு. வருவல் - என்பது காலமயக்கம்.

இச்செய்யுளைக்கேட்ட இளங்குமணன் புலவர்க்கு வேண்டிய சிறப்பளித்துத் தன்றமையனைப் பணிந்தழைத்து வந்து அவன் கட்டளையின்படி இளவரசுபுரிந்து வாழ்ந்திருந்தான்; என்பர்.

## சு—சிவபிரான்றூதுசெல்லல்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாரூரிற் பரவையார்பாற் றூதுசெல்லும்படி புற்றிடங்கொண்ட பிரானை வேண்டினர். அவருமவ்வாறே சென்றருளினர். பெரியபுராணத்திற் பின்வருஞ் செய்யுளிற் காண்க.

ஆசிரியவிருத்தம்.

நாயனீரேநானுமக்கிங்கடியேனாகினீரெனக்குத்
தாயினல்லதோழருமாந்தம்பிரானாரேயாகி
லாயவறிவுமிழந்தழிவேனயர்வுநோக்கியவ்வளவும்
போயிவ்விரவேபரவையுறுபுலவிதீர்த்துத்தாருமென.

அன்புவேண்டுந்தம்பெருமானடியார்வேண்டிற்றேவேண்டி
முன்புநின்றுவிண்ணப்பஞ்செய்தநம்பிமுகநோக்கித்
துன்பமொழிநீயாமுனக்கோர்தூதனாகியிப்பொழுதே
பொன்செய்மணிப்பூண்பரவைபாற்போகின்றோமென்றருள்செய்
[தார்.

## எ—சர்க்கரை யெச்சில்வாய்கழுவுதல்.

காரைப்பதியென்னும் ஊரிலே சர்க்கரைப்பிள்ளை யென்னுமொரு பிரபுவினிடத்தில் ஓர் கவிஞர் வந்து நம்மைநீர் தூஷித்ததாக்கேள்வியாயினேமே யென்றுகேட்க அப்பிரபுவானவர் இல்லையென்றுகூறி நெய்யைக்காயவைத்து அதிலே கையையிட்டுச் சுடாதி

ருத்தலைக்காட்டினர். அதுகண்ட கவிஞர் வியந்து பின்வருங் கவியைக் கூறினர்.

மகிழ்ந்துகா ரைப்பதியில் வாழ்சர்க் கரைதான்
புகழ்ந்து திரிபுல வோரை—யிகழ்ந்துநான்
வையவில்லை யென்றுசொல்லி மண்டலமெல் லாந்துதிக்க
நெய்யிலே கையையிட்டா னேர்ந்து.

இச்செய்யுளைக் கேட்டு வந்த பின்னர்ப்பிரபுவானவர் தம்முடனி ருந்து போசனஞ்செய்யும்படி கவிஞரை வேண்ட அவருமவ்வாறே போசனஞ்செய்து கரசுத்தி செய்யும்போது கவிஞர் பிரபுவைநோக் கி நீர் நம்பாலன்புடையீராயின் நமது எச்சில்வாயைச் சுத்திசெய்து விடும் என்று கூறினர்; பிரபுமனமகிழ்ந் திப்பணி கிடைத்ததே யென்று அவ்வாறு செய்தனர்; என்பர்.

## அ—காளத்தி கைபுற்றிலிடுதல்.

நின்றையென்னு மூரிலேயிருந்த காளத்திப்பிள்ளை யென்னும் பிரபுவானவர் பெருந்தியாகியாகவிருந்து கொடுத்து வறுமையடைந்த தனலே இனிபிங்குவந்து இல்லையென்றிரப்போர்க்கு நாமுமில்லை யென்றுரைத்தல் கூடாது,இவ்வூரைவிட்டுப்போதலே நலம்என்றுகரு திப் புறப்பட்டு ஓர் மடத்திலிரவிற் சயனித்திருந்தனர். அவரைத்தே டியோர்கவிஞர் அம்மடத்திற்றங்கியிருந்தவர் பின்வரும் வெண்பா வை யியற்றிக்கொண்டிருந்தனர்.

நீளத் திரிந்துழன்ருய் நீங்கா நிழற்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கா னீயெங்கே நானெங்கே
யின்றைக்கே யென்பா லிரு.

அதனைக் கேட்ட அப்பிரபுவானவர், 'இனிக்காலையிலக்கவி ஞர் நமது மனைக்குச்சென்று நம்மைக்காணவிடின் வருந்துவரே' யென்று அவர்க்கு முன்னெழுந்து சென்று தமது மனையிலிருந்தனர். கவிஞருங் காலைபிற்சென்று பிரபுவைக்கண்டு சிலகவிகளைச்சொல்லிப் பிரசங்கித்தனர்; உடனே பிரபு இப்மகாகவிஞர்க்குக் கொடுப்பதற் கில்லாமலிருப்பதினும் இறந்துவிடுதலே நலமென்று தமது மனைக்

கொல்லையிலிருந்த புற்றிலிருக்கிற துவாரத்திலே கையை நீட்டினர். அப்போது அதிலிருந்த நாகமானது கடியாமலே தன்னிடமிருந்த இரத்தினமொன்றினை அவர்கையிற் கக்கிவிட்டது. உடனே மகிழ்ந்து வந்து கவிஞருக்குபசரித்துதவியனுப்பினர்; பின்னர் இனிவருங் கவிஞருக்கென்செய்வோமென்றுகருதி நாகமேயினியாயினுங் கடிக்க வேண்டுமென்று அப்புற்றின்றுவாரத்திற் கையைநீட்டினர். அப்போது அந்த நாகமுன்போலவே பிறிதொரு இரத்தினத்தைக் கையிலுதவியது. அதனைற்பெரும்பொருளெய்தி வாழ்ந்திருந்தனர் என்பர். இவர் நின்றையென்பதைத் திருநின்றவூர் என்றும், இவர் கொடையினைத்தெரிந்து பொறாமையால் அந்நாட்டரசன் இவர் பொருளையெல்லாங் கவர்ந்து கொண்டான்; அதனால் அவ்வூரைவிட்டுப்போதலே நலமென்று போய் வழியிலொருமடத்திலிரவினிற் சயனத்திருந்தன ரென்றுங் கூறுவர்.

## ௯—கம்பையன் விரலாழியீதல்.

வாடிமிட்டாஜமீந்தார்மரக்கம்பைநாயுடு என்பவரிடத்தில் ஓர் கவிஞர் பிரசங்கஞ்செய்திருக்கின்றபோது ஜமீந்தார்பராமுகமாக விருத்தல்கண்டு கவிஞர் கோபமுற்று முகத்திலறைந்து விட்டனர். ஜமீந்தார் சினங்கொள்ளாமல் நல்லபுத்திவரச்செய்ததாக நினைத்து தமது கையிலிருந்த மோதிரத்தைக் கவிஞர் கையிலிட்டார். அப்போது கவிஞர் பின்வருங் கவியைக் கூறினர்.

வையம்புகழுஞ்சந்திரகிரிவளங்கொள்பதியைப்புரக்குமெங்க
ளையன்குமரக்கம்பையவேளறிவுக்கினிமேனிகருண்டோ
வைதேன்வைதேன்சினந்திரவாயிலடித்தேனேகுமென்று
கையைப்பிடித்துமோதிரமுங்கனகமுடிப்புந்தந்தானே.

## ௧௦—பெரியவன் பெண்கொடுத்தல்.

திருநெல்வேலிக்குச் சமீபமாயிருக்கிற தேவநல்லூரிற் பெரியவன்பிள்ளையென்னுமோர்மகாப்பிரபுவானவர் கவிவாணர்கள்கேட்டன வெல்லாங்கொடுத்துவந்தனர். அக்காலத்திலே அவர்பாற் பரிசுபெற்ற ஓர்கவிஞர் மற்றொருகவிஞரிடத்திற் பெரியவன்பிள்ளை கேட்டனவெல்லாங் கொடுக்கின்றாரென்றார்; அவர் மனையாளைக் கேட்

கினுங் கொடுப்பரோ வென்ருர்; பரிசுபெற்ற கவிஞர் அதற்குச்சந் தேகமில்லையென்ருர்; அப்படியாயினறிவோமென்ன, இருவருஞ் சென்று பிரபுவைக்கண்டு பிரசங்கித்துக் கொண்டிருந்தனர். அதிக நாழிகையாயினதால் அப்பிரவுவின் மனைவிவந்து போசனகாலமாயி ற்றே யென்ருள். முன்பரிசுபெற்ற கவிஞர் தம்மிரண்டுகைகளையும் நீட்டித்தம்மை நோக்கிக்குறுக்கினுர். உடனே பிரபுவானவர்வாயாற் கேளாது குறிப்பாற்கேட்கிருர், குறிப்பறிந்ததிலே கொடையென வுட்கொண்டு தம்மனையாளைநோக்கி நீயின்றுமுதலாக இக்கவிஞர் வச மாகவிருந்து பணிசெய்வாயென்றனர்; அக்கவிஞர் ஈதென்னபுதுமை யாகவிருக்கின்றது; இவ்வம்மையார் நம்மைப் போசனத்துக் கழை க்கின்றதனுல் அதனையங்கீகரிக்கவேண்டுமென்று குறிப்பாற்றெரிவித் தேனேயன்றி வேறில்லை, அதைக்கவனிக்காது இலேசாக இப்படிக் கூறலாமாவென்று பின்வருங்கவியைக்கூறி, மனைவியை அப்பிரபுவே யேற்றுக்கொள்ளும்படி செய்தனர்; என்பர்.

கலித்துறை.

கண்ணு யிரம்படைத் தான்மக வானவர் காடுறைந்தா
ரெண்ணுன நூற்றொரு பேர்மடிந் தாரிலங் காபுரியு
மண்ணுய் மடிந்தது வாலியும் பட்டனன் மாநிலத்திற்
பெண்ணு லுனக்கெளி தாமோநந் தேவைப் பெரியவனே.

## கக—பிணிமுகத்தோன் கீரனைப்புரத்தல்.

இதன்பொருள், மயில்வாகனத்தையுடையவராகிய குமரக்கட வுள் (கடைச்சங்கப்புலவராகிய) நக்கீரரைக்காத்தல் என்பதாம்.

ஒருமலைக்குகையின் கண்ணே அடைக்கப்பட்டிருந்த தொளா யிரத்துத்தொண்ணூற்றென்பதின்மரோடு ஆயிரவராகச்சேர்த்துண் ணக்கருதி ஓர்பூதமானது நக்கீரரையும் பிடித்து அக்குகையிலடைத்து விட்டு உண்ணுதற்காக நீராடப்போயினது. அப்பொழுதங்கிருந்தவ ரெல்லாங் நக்கீரரை நோக்கி இன்றுவரையும் பூதத்தா லுணவு கொ ண்டு வந்து கொடுக்கப்பிழைத்திருந்தோம், இப்பொழுதும்மாலே அப்பூதத்திற்கிரையாவோமென்றுரைத்தனர். உடனே நக்கீரர் முரு கக்கடவுளைக்குறித்து "உலகமுவப்ப" என்னுமுதற் குறிப்பையுடை

யவகவலைப்பாடினர் (அதற்குத் திருமுருகாற்றுப்படை யென்று பெயர்கூறுவர்) அப்பொழுது முருகக்கடவுளெழுந்தருளிப் பூதத்தை வேலாற்கொன்று நக்கீரரைச் சிறைமீட்டருளினர். ஏனையருஞ்சிறை நீங்கியுய்ந்தனர்.

## கஉ—ஒருவன்பேதை முதுகிலன்னமிடல்.

ஒருவேளாளப்பிரபுவானவர் கவிஞர்க்குபசரித்து அவர்கள் சொன்னபடி யெல்லாஞ் செய்பவராயிருந்தனர். அதனைப் பரீக்ஷை செய்யப்புகுந்த வோர்கவிஞர் அப்பிரபுவைக்கண்டு பிரசங்கித்தனர். அப்புலவரைத் தம்முடனிருந்து போசனஞ்செய்யுமாறு பிரபு வேண்டினர். அப்பொழுது கவிஞர்உம்மனைவி முதுகிலே அன்னம் படைத்தாற் புசிப்போமென்றார். பிரபு மகிழ்ந்து இஃது எனக்கரிய தன்றே யெனக் கூறிச் சூலியாயிருந்த தம்மனைவி முதுகிலே அன்னம் படைத்துபசரித்தனர்; இதனைத் திருக்கைவழக்கத்திற் கம்பர் "சூலி முதுகிற் சுடச்சுடவப் போதமைத்த, பாலடிசிறன்னைப்படைக்குங்கை" எனக் கூறியிருக்கின்றனர்.

இத்துணையரோ செந்தமிழ்க்குத் தொண்டுசெய்தவர்? புறநானூறுமுதலாய நூல்களை நோக்குங்காற் கணக்கிடப்படாதவருள்ளார். இங்கேயெடுத்துக்கூறிய "சீரிலகு" என்னுஞ் செய்யுளிற் கண்டவர்களின் றொண்டினைமாத்திரம் பரம்பரையிற் கேள்வியாயினவாறே சேற்றூர்ச் சமஸ்தானவித்துவானும் என்பிதாவுமாகிய இராமசாமிக்கவிராயரவர்களும் என்றம்பி சுப்பிரமணியக்கவிராயருங் கூறியவாறு வெளியிடலாயினேன்.

இங்ஙனம்

சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான்,

அருணாசலக்கவிராயர்.

## சங்கத்து வித்துவான்கள் செலுத்தற்குரிய சந்தா ரூ 6-யும் அன்புற்றனுப்பியோர்.

1. ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள், அக்கிராசனாதிபதி, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.
2. K. சுந்தரராமையரவர்கள் M. A. கும்பகோணம்.
3. வே. சாமிநாதையரவர்கள், சென்னை.
4. T. A. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள், B. A. திருவல்லிக்கேணி.
5. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், M. A., M. R. A. S. பங்களூர்.
6. ரே. அப்புவையங்காரவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர்.
7. வி. சதாசிவச் செட்டியாரவர்கள், திருச்சிராப்பள்ளி.
8. எஸ். வீ. கள்ளபிரான்பிள்ளை யவர்கள், B. A. செங்கற்பட்டு.
9. பி. குருராவ் அவர்கள் M. A. L. T. திருச்சிராப்பள்ளி.
10. ஆ. கா. பிச்சைபிபுராகிம்புலவரவர்கள், திருச்சிராப்பள்ளி.
11. M. S. சுப்பிரமணியக் கவிராயரவர்கள், திருநெல்வேலி.
12. V. குப்புசாமிராஜு அவர்கள், தஞ்சாவூர்.
13. பூவை. அஷ்டாவதானம்-கல்யாணசுந்தரமுதலியாரவர்கள் சென்னை.
14. T. T. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள், B. A. சென்னை.
15. ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள், தரங்கம்பாடி
16. திரு. நாராயணையங்காரவர்கள், மதுரை.
17. ஸ்ரீமத். எம். கே. எம். அப்துல்காதுறு சாகிப் அவர்கள். இளையான்குடி.
18. ஐ. சாமிநாதமுதலியாரவர்கள், தஞ்சை.
19. வா. குலாம்காதிறு நாவலரவர்கள், நாகூர்.
20. V. J. தம்பிப்பிள்ளையவர்கள், M. R. R. S. கொழும்பு.
21. K. G. சேஷையரவர்கள், B. A. B. L. திருவனந்தபுரம்.
22. சிற். கைலாசபிள்ளையவர்கள், கொழும்பு.
23. காரை, சிவசிதம்பர ஐயரவர்கள், கோலாலம்பூர்.

——:o:——

திருச்சிற்றம்பலம்.

# நமது சங்காபிமானம்.

சென்ற ஐப்பசிமீ நமது மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வித்வக் கழகத்தின் அங்கத்தினுளொருவராக, கோலாலம்பூரில் வசிக்கும் வித்வான் காரை-ஸ்ரீமத்-சிவசிதம்பரையரவர்கள் சேர்ந்துள்ளார்கள். இவ்வையரவர்கள் நமது சங்கசம்பந்தம் பெற்றகாலம் சிறிதேயெனினும் நம் சங்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாய ஏடுகள் அனுப்பியும், நம் 'செந்தமிழ்' க்கு இதுவரை பத்துச் சந்தாதார்கள் சேர்த்தனுப்பியும், நம் இந்துமதப் பிரசங்கமாகிய சத்கருமத்தையே தம் கருமமாக மேற்கொண்ட ஐயரவர்கள் அதுபற்றித் தாம் செல்லும் பலவிடங்களிலும் நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழியை ஆதரித்தல் நம் தமிழ்மக்கள்கடமை யென்பதைப் பல்லோருக்கும் அறிவுறுத்தியும் நம் சங்காபிமானமே பெரிதும் மேற்கொண்டு செய்துவரும் காரியங்கள் பல.

இவ்வையரவர்களே போன்று நம்சங்கத்தின் அங்கத்தினராய ஒவ்வொருவரும் கல்விவகையானும் பொருள்வகையானும் தம்மாலும் பிறராலும் இயன்றவரை நம் சங்கத்திற்குச் செய்தும் செய்வித்தும் வருவரேல், புறவிருள் நீங்க வொளிக்கற்றை பரப்பி அத்தமிக்கும் செஞ்ஞாயிறு போன்றல்லாது நம் சங்கம் அகவிருள்நீக்கும் தமிழ்க் கற்றை பரப்பி என்றுமழியா ஞானபானுவாய் விளங்குமென்பது உண்மையே.

நம் சிவசிதம்பரையரவர்களது நம்சங்காபிமானம் இம்மட்டோ! அன்று அன்று; இன்னும் பலவுள. அவற்றுள் ஒன்று கீழே காட்டுதும்.

ஷெ ஐயரவர்கள் தம் நற்றாய் சிவபதமடைந்த ஞான்று
த்திய தான தருமங்களில் ஒரு பகுதியாக வைத்து ரூ 7—
நம் தமிழ்ச் சங்கத்தின் உபயோகத்திற்காக நம்பால் வர

துள்ளார்கள். அக் நல்கொடையை, நம் தமிழ் நாட்டுச் ச... களில் எவ்வளவோ பொருள்கள் விரயஞ்செய்யப்படுவனவற்... தருமம் என்ற முறையில் செலவாகும் சிலபகுதிகளில் இவ்வித்திய... தருமத்தையும் ஒரு பகுதியாக வைத்து உபகரித்து வரவேண்டுவது நம் தமிழ் மக்கள் அனைவர்க்கும் உரிய அரும்பெரும் கடமை யென் பதனை அறிவுறுத்தற்பொருட்டே நமது ஐயாவர்கள் முன்னர்த் தாமே செய்து காட்டியதாக எண்ணுவதே இயைபுடைத்து.

இவ்வையாவர்கள் இவ்வாறு காட்டிய அரிய பெரிய தமிழபி மானம் அறிவுடையார் எல்லாராலும் பெரிதும் பாராட்டத்தக்கது. இந் நெறியினைப் பின்பற்றி நம் தமிழ்மக்களனைவரும் தங்கள் தங் கள் கிரகங்களில் செலவாகும் சுபாசுப கருமங்களிலெல்லாம் பல வாறாக வியற்றற்குரிய தான தருமங்களில் இம்மதுரைத் தமிழ்ச் சங்க வித்தியா தானத்தையும் ஒன்றாக வைத்து அவரவர்கள் சக்தி க்குத் தக்கவாறு சிறிது சிறிது பொருளுதவி வரினும், அஃது இச் சங்க வளர்ச்சிக் குரியதோர் பெரிய மூலதனமாக விளங்கு மென்ப தில் யாது மைய மின்று. இம் முறையே கொண்டு அரும் பெருங் காரியங்களை மேலை நாட்டு ஐரோப்பியர் பலர் கூடி எளிதில் முடிக் கின்றார்களென்பது பலரும் நன்கறிந்த விஷயமே. அவ்வாறே நமது இந்து தேச வாசிகளும் பொது நன்மையான இத்தகைய காரியங்க ளில் முயன்றுவரின் பலவகையாலும் நமது தேசம் செழித்து யாவ ரும் ஒரு குறையுமின்றி வாழ்வாரென்பது சரதமே.

இங்ஙனம்,

சங்காபிமானிகட்குத் தொண்டுபூண்டொழுகும்

பொ. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி,

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

15—2—05.